

சென்னை அண்ணா அறிவாலயத்தில் பேரறிஞர் அண்ணா அவர்களின் 115வது பிறந்தநாள் – முப்பெரும் விழாவை முன்னிட்டு பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் சிலையும், அறிவாலய கட்டடமும் வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளது.

# சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் பரவலாக மழை!

சென்னை, செப்.15-

வடமேற்கு மற்றும் மத்திய மேற்கு வங்கக்கடலில் புதிய காற்றழுத்தத் தாழ்வு பகுதி உருவாகி இருப்பதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்து இருந்தது. மேற்கு திசை காற்றின் வேக மாறுபாடு காரணமாக வரும் 18ம் தேதி வரை தமிழகத்தில் மிதமான மழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும் சென்னை வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் தெரிவித்து இருந்தனர். இந்த நிலையில், சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் கனமழை பெய்தது. ஆலந்தூர், கிண்டி, அசோக் நகர், வடபழனி, ஈக்காட்டுத்தாங்கல் உள்ளிட்ட பகுதிகளில் பரவலாக மழை பெய்தது.

காலை முதல் வெயில் வாட்டி வதைத்த நிலையில், தற்போது மழை பெய்து வருவதால் நகரில் குளிர்ச்சியான சூழல் உருவாகி இருக்கிறது.

# கவுதம புத்தர் !



அறியாமை இருளில் ஆழ்ந்து, மூட நம்பிக்கைகளில் மூழ்கிக் கிடந்த மக்களிடையே அறிவொளியைப் பாயவிட்டார் ஓர் அறவாணர் ! பசி, பிணி, மூப்பு ஆகிய தாங்கொணாத துன்பங்களில் சிக்கி, எண்ணற்ற மக்கள் தவிக்கும் பொழுது – தாம் மட்டும் தன்னலத்தோடு இன்பங்களில் மிதப்பதா என்று எண்ணி அரண்மனை வாழ்வுக்கே விடை கொடுத்தார் அந்த இளவரசர் !

நீதியற்ற முறையில் வேத சமயத்தினராகிய ஆரியர் புகுத்திய சாதி முறையைச் சாடி, எந்தத் தொழில் புரிவோரும் இணைந்து வாழும் ஒருமைப்பாடு கொண்ட ஒரு சமநிலைக் குமுகாயத்தை உருவாக்கும் அறப் புரட்சியை நடத்தினார் அந்தப் பகுத்தறிவுப் பரிதி ! அவர்தாம் கவுதம புத்தர் !

- பேரறிஞர் அண்ணா

### பெரியாரின் நெஞ்சில் தைத்த முள்ளை அகற்றியது திராவிட மாடல் அரசு!

# கரு சுமக்கும் பெண்களும் இனிக் கருவறைக்குள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!

சென்னை, செப் 15-

பெரியாரின் நெஞ்சில் தைத்த முள்ளை அகற்றியது திராவிட மாடல் அரசு. கரு சுமக்கும் பெண்களும் இனிக் கருவறைக்குள் செல்லும் நிலையை உருவாக்கியுள்ளது திராவிட மாடல் அரசு என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பெருமிதத்தோடு குறிப்பிட்டுள்ளார்.

“அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகலாம்” திட்டத்தின் கீழ் மூன்று பெண்கள் அர்ச்சகர் பயிற்சி முடித்ததையொட்டி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**பெண்கள் விமானத்தை இயக்கினாலும், விண்வெளிக்கே சென்று வந்தாலும் அவர்கள் நுழைய முடியாத இடங்களாகக் கோயில் கருவறைகள் இருந்தன. பெண் கடவுளர்களுக்கான கோயில்களிலும் இதுவே நிலையாக இருந்தது.**

**ஆனால், அந்நிலை இனி இல்லை! அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் எனப் பெரியாரின் நெஞ்சில் தைத்த முள்ளை நமது திராவிட மாடல் ஆட்சி அகற்றியதில், கரு சுமக்கும் பெண்களும் இனிக் கருவறைக்குள்...**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

# அக்டோபர் 27ஆம் தேதி சேலம் கோட்டை மாரியம்மன் கோயில் குடமுழுக்கு!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்!



சென்னை, செப்.15-

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு நேற்று (14.09.2023) சேலம், அருள்மிகு கோட்டை மாரியம்மன் திருக்கோயிலில் ரூ.4.35 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் திருப்பணிகளையும், ரூ.4.5 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் சேலம் மண்டல இணை ஆணையர் அலுவலக கட்டுமானப் பணிகளையும் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது,

முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றபின், குடமுழுக்கு நடத்திட எடுத்துக் கொள்ளப்பட்டு, நீண்ட காலமாக திருப்பணி நடைபெற்று வரும் திருக்கோயில்கள், ஆகம விதிப்படி குடமுழுக்கு நடந்து 12 ஆண்டுகள் நிறைவு பெற்று, மீண்டும் குடமுழுக்கு செய்யப்பட வேண்டிய திருக்கோயில்களை பட்டியலிட்டு, அவற்றின் பணிகளை துரிதப்படுத்தி வருகிறோம்.

கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டாறு ஆதிகேசவப் பெருமாள் திருக்கோயில் 400 ஆண்டுகளுக்கு பிறகும், காஞ்சிபுரம் மாவட்டம், சாத்தனஞ்சேரி, கரியமாணிக்க வரதராஜ பெருமாள் திருக்கோயில் சுமார் 300 ஆண்டுகளுக்கு பிறகும், பல்வேறு திருக்கோயில்கள் 200 ஆண்டுகள், 150 ஆண்டுகளுக்கு பிறகு இந்த ஆட்சியில் தான் குடமுழுக்கு நடத்தப்பட்டது. அதே போல் 150 ஆண்டுகளுக்கு பிறகு விழுப்புரம் மாவட்டம், பூவரசங்குப்பம், லட்சுமி நரசிம்மர் திருக்கோயிலிலும், 80 ஆண்டுகளுக்கு பிறகு காஞ்சிபுரம் மாவட்டம், சீட்டணஞ்சேரி காளீஸ்வரர்திருக்கோயிலும் இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு தான் தேரோட்டம் நடைபெற்றது.

அந்த வகையில் சேலம், கோட்டை மாரியம்மன் திருக்கோயிலில் குடமுழுக்கு பணிகள் 2016 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. நீண்ட ஆண்டுகளாக திருப்பணிகள் காலதாமதம் ஏற்பட்டதை சேலம் வடக்கு சட்டமன்ற உறுப்பினர் இராஜேந்திரன் துறையின் கவனத்திற்கு கொண்டு வந்தவுடன் கடந்த 07.09.2022 அன்று இத்திருக்கோயிலுக்கு வருகை தந்து ஆய்வு செய்தோம். 850 ஆண்டுகள் பழமையான இத்திருக்கோயிலுக்கு ரூ.4.35 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வந்த திருப்பணிகளில் 90 சதவீதம் நிறைவுற்றுள்ளது.

எனவே சேலம் அருள்மிகு கோட்டை மாரியம்மன் திருக்கோயிலுக்கு அடுத்த மாதம் 27 ஆம் தேதி குடமுழுக்கு நன்னீராட்டு விழா நடைபெற உள்ளது என்பதனை மகிழ்ச்சியோடு பகிர்ந்து கொள்கிறேன். அதேபோல் திருப்பணி தொடங்கப்பட்டதிலிருந்து இத்திருக்கோயிலின் தங்கத் தேர் பக்தர்களுடைய நேர்த்திக்கடனை செலுத்துவதற்கு உலா வராத சூழ்நிலை ஏற்பட்டு இருக்கின்றது. ஆகவே அம்மனின் தங்கத் திருத்தேரையும் ரூ.4.25 இலட்சம் செலவில் புனரமைத்து குடமுழுக்கு நடைபெறுகின்ற அதே நாளில் உலா வருவதற்கு ஏற்பாடு செய்யப்படும். மேலும், சேலம் மண்டல இணை ஆணையர் அலுவலகம் ரூ.4.5 கோடி செலவில் கட்டப்பட்டு வருகிறது. அதனையும் ஆய்வு செய்தோம்.

இந்து சமய அறநிலையத் துறையின் வரலாற்றில் இல்லாத அளவிற்கு கடந்த 28 மாதங்களில் ரூ.5,210 கோடி மதிப்பிலான திருக்கோயில் சொத்துக்கள் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கப்பட்டுள்ளன. 1,044 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடத்தி வைக்கப்பட்டுள்ளது. பக்தர்களுக்கு தேவையான அடிப்படை கட்டமைப்பு வசதிகளும் மேம்படுத்தி வழங்கப்பட்டுள்ளன. 1,000 ஆண்டுகளுக்கு முற்பட்ட தொன்மையான திருக்கோயிலை புனரமைக்க முதலமைச்சர் அவர்கள் ஆண்டிற்கு ரூ.100 கோடி வீதம் ரூ.200 கோடி வழங்கியுள்ளார். இந்த ஆட்சியை அதிக குடமுழுக்குகள் நடத்திய ஆட்சியாக கருதி மக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளார்கள்.

### பா.ஜ.க. மாநிலத் தலைவரின் உளறல்!

இப்படி சிறப்பாக செயல்படும் ஆட்சியின் மீது குறை சொல்வதற்கு எந்த பொருளும் கிடைக்கவில்லை என்பதால் பா.ஜ.க மாநில தலைவர் தினம் ஒரு உளறலை உளறிக் கொண்டிருக்கிறார். தமிழ்நாட்டில் என்ன செய்து தங்கள் கட்சியை தக்க வைத்துக் கொள்ளலாம் என புரியாமல் திகைத்து கொண்டு இருக்கின்றார். என் மண் என் மக்கள் யாத்திரை படுதோல்வியே இதற்கு காரணமாகும். உப்பு சப்பு இல்லாத சனாதன பிரச்சனை கையில் எடுத்துக் கொண்டு வருகின்றார். எங்களை பொறுத்தளவில் தெளிவாக சொல்லி விட்டோம் சனாதனத்தை ஏற்றுக் கொண்டவர்களை எல்லாம் நாங்கள் எதிர்க்கவில்லை சனாதனத்தில் இருக்கின்ற ஒரு சில கோட்பாடுகளை தான் நாங்கள் எதிர்க்கிறோம். இந்த ஆட்சியை பொறுத்தளவில் சமத்துவத்தை நாங்கள் தொடர்ந்து வலியுறுத்தி கொண்டே இருப்போம். அதை வலியுறுத்துகின்ற கடமை உறுதி திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் அமைச்சரவையில் இருக்கின்ற அமைச்சர்களுக்கும் உண்டு என்பதை தெளிவாக சொல்லிக் கொள்கிறேன்.

### 1000வது குடமுழுக்கு

சமீபத்தில் நடைபெற்ற 1,000 வது குடமுழுக்கான மேற்கு மாம்பலம் அருள்மிகு காசி விஸ்வநாதர் திருக்கோயில் குடமுழுக்கு சமூக ஊடகங்களில் ட்ரெண்டிங்காக பரவி அனைத்து தரப்பினரும் இந்த ஆட்சியை பாராட்டினார்கள். அடுத்ததாக திருக்கோயில்கள் சார்பில் அர்ச்சகர் மற்றும் ஓதுவார் பயிற்சி பள்ளிகளில் பயிற்சி பெற்ற 98 மாணவர்களுக்கு பயிற்சி நிறைவு சான்றிதழ்களை வழங்கினோம். இது பெண்களின் உயர்விற்கான ஆட்சி என்பதற்கு உதாரணமாக அவர்களில் 3 பெண்கள் அர்ச்சகர் பயிற்சி வகுப்பினை முடித்துள்ளனர் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். இதைத்தான் நாங்கள் சமத்துவ ஆட்சி என்று கூறுகிறோம். அனைத்து சாதியினரும் அர்ச்சகராகலாம் என்ற திட்டத்தின் மூலம் 38 அர்ச்சகர்கள் திருக்கோயிலில் பணியமர்த்தப்பட்டு இருக்கிறார்கள். அன்னை தமிழில் வழிபாடு நடைபெற்று கொண்டிருக்கிறது. இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகுதான் 8 பெண் ஓதுவார்களுக்கு பணி நியமன ஆணை வழங்கப்பட்டு இருக்கின்றது. இப்படி இந்து சமய அறநிலையத்துறை வரலாற்றில் எந்த ஆட்சியிலும் இல்லாத அளவிற்கு ஒரு பெரிய மாற்றத்தை உருவாக்கி காட்டிய தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை இறை அன்பர்களும், சமூக ஆர்வலர்கள், பக்தர்களும் போற்றி புகழ்ந்து கொண்டிருக்கிறார்கள். திருக்கோயில்கள் மேம்பாடு குறித்து எங்கள் கவனத்திற்கு யார் கொண்டு வந்தாலும் கள ஆய்வு செய்து அதனை உடனடியாக நிறைவேற்றுவதற்கும், புகார்கள் மீது உரிய விசாரணை மேற்கொண்டு உரிய நடவடிக்கை மேற்கொள்வதற்கும் இந்து சமய அறநிலையத்துறை தயாராக உள்ளது என்று தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது மாவட்ட ஆட்சித்தலைவர் செ.கார்மேகம், சேலம் வடக்கு சட்டமன்ற உறுப்பினர் இரா. இராஜேந்திரன், சேலம் மாநகராட்சி மேயர் இரா. இராமச்சந்திரன், இந்து சமய அறநிலையத் துறை இணை ஆணையர் திருமதி வி.சபர்மதி, உதவி ஆணையர் கே.ராஜா மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

### மக்கள் விரோத பா.ஜ.க. அரசே வெளியேறு!

# இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மூன்று நாள் தொடர் மறியல் போராட்டம்!

## 61 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பங்கேற்பு!

சென்னை, செப்.15-

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, நேற்று (14.09.2023) தமிழ்நாடு முழுவதும் மூன்றாவது நாளாக 50-க்கும் மேற்பட்ட மையங்களில் 23 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.

நாட்டின் ஜனநாயக வாழ்வுக்கும், கூட்டாட்சி முறைகளுக்கும் ஏற்பட்டுள்ள பேராபத்தை தடுக்கவும், மக்களின் வாழ்க்கை தர மேம்பாட்டிற்கும் பா.ஜ.க. அரசை ஆட்சியில் இருந்து அகற்றுவது முன் தேவையாகியுள்ளது. இந்த முக்கியத்துவம் வாய்ந்த அரசியல் கடமையில் பொது மக்களின் கவனத்தையும் ஆதரவையும் திரட்டும் வகையில் 12 முதல் 14 வரை மூன்று நாள் தொடர் மறியல் போராட்டத்தை நடத்தியது.

தமிழ்நாடு முழுவதும் 200க்கும் மேற்பட்ட மையங்களில் இந்தப் போராட்டத்தில் 61 ஆயிரம் பேர் கலந்து கொண்டுள்ளனர். போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்த அனைவருக்கும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு நன்றி தெரிவிப்பதுடன், கலந்துகொண்டவர்களுக்கு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறது என்று மாநில செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

# பேரறிஞர் அண்ணா 115-வது பிறந்த நாள்!

## கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் - கழக முன்னணியினர் சென்னை, வள்ளுவர் கோட்டத்திற்கு அருகே உள்ள பேரறிஞர் அண்ணா திருவுருவச் சிலைக்கு மாலை அணிவிக்கின்றனர்.

பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா அவர்களின் 115வது ஆண்டு பிறந்த நாளான இன்று (15.9.2023 – வெள்ளிக்கிழமை) காலை 8.00 மணி அளவில் சென்னை, வள்ளுவர் கோட்டம் அருகே உள்ள பேரறிஞர் அண்ணா திருவுருவச் சிலைக்கு கழக இளைஞர் அணிச் செயலாளர் – இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி மற்றும் அமைச்சர்கள் மா. சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு உள்ளிட்ட கழக முன்னணியினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்துகிறார்கள்.

கழக மாநில அமைச்சர் பெருமக்கள், முன்னாள் இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழகச் செயலாளர்கள், தலைமைச் செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்டக் கழக, பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் இளைஞர் அணி, மகளிர் அணி, மாணவர் அணி, இலக்கிய அணி, தொழிலாளர் அணி, வழக்கறிஞர் அணி, தொண்டர் அணி, விவசாய அணி, விவசாயத் தொழிலாளர் அணி, மீனவர் அணி, ஆதிதிராவிடர் நலக்குழு, மகளிர் தொண்டர் அணி, கலை,இலக்கிய பகுத்தறிவு பேரவை, மருத்துவ அணி, பொறியாளர் அணி, சிறுபான்மையினர் நலஉரிமைப் பிரிவு, வர்த்தகர் அணி, தகவல்தொழில்நுட்ப அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி, அமைப்புசாரா ஓட்டுநர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி ஆகிய அனைத்து அணி நிர்வாகிகள் மற்றும் கழகத் தோழர்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

நாள் : 12 - 09 - 2023.

**நே.சிற்றரசு,**
செயலாளர், சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க.



திருவள்ளூர் மாவட்டம் பள்ளிக் கல்வித்துறை சார்பில் ஆவடி மாநகராட்சி திருமுல்லைவாயில் அரசு மேல்நிலைப் பள்ளியில் மிதிவண்டிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் முன்னாள் அமைச்சரும் மாவட்ட கழக செயலாளர் ஆவடி சா.மு. நாசர் எம்.எல்.ஏ கலந்து கொண்டு 86 விலையில்லா மிதிவண்டிகளை மாணவ மாணவிகளுக்கு வழங்கினார். அருகில் ஆவடி மாநகராட்சி மேயர் ஜி.உதயகுமார், மாவட்ட கல்வி அலுவலர் மு.முகமதுஅப்துல்லா, ஆவடி மாநகர பொறுப்பாளர் சண்பிரகாஷ், பகுதிச் செயலாளர் பேபி சேகர், தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ், மாவட்ட துணைச் செயலாளர் எஸ்.ஜெயபாலன், பொதுகுழு உறுப்பினர் ஜி.விமல்வர்ஷன், தலைமை ஆசிரியர் ப.பத்மா, வார்டு கவுன்சிலர் துளசிங்கம் சக்திவேலன்,மாவட்ட இளைஞர் அணி கே.சுரேஷ்குமார், அக்னி மாசெ.ராஜேஷ், உள்பட ஆசிரியர்கள் கழக நிர்வாகிகள் மாணவ மாணவிகள் உள்ளனர்.

### களக்காடி எல்லப்பன் தலைமை! எம்.கிருஷ்ணமூர்த்தி முன்னிலை

# ஜாபர்கான்பேட்டையில் பேரறிஞர் அண்ணா பிறந்தநாள் விழா!

## திருவுருவச் சிலைக்கு அமைச்சர் மா.சுப்பிரமணியன் மாலை அணிவித்து மரியாதை!

சென்னை, செப்.15-

சைதை மேற்குப் பகுதி தி.மு.க. சார்பில் 15.9.2023 வெள்ளிக்கிழமை அன்று காலை 7 மணிக்கு, ஜாபர்கான்பேட்டை கெங்கையம்மன் கோயில் அருகில் உள்ள பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா - முப்பெரும் விழா நடைபெறு கின்றது.

நிகழ்ச்சிக்கு அவைத்தலைவர் களக்காடி எல்லப்பன் தலைமை வகிக்கிறார்.

பகுதிச் செயலாளர் எம். கிருஷ்ணமூர்த்தி முன்னிலை வகிக்கிறார்.

நிகழ்ச்சியில் மாவட்டச் செயலாளர் அமைச்சர் மா.சுப்பிரமணியன், பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்துவதுடன் மேலும் தந்தை பெரியார், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கும் மாலை அணிவித்து மரியாதை செலுத்துகிறார்.

இந்நிகழ்ச்சியில் துணை மேயர் மு.மகேஷ்குமார், மா.அன்பரசன், வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன், ப.சுப்பிரமணி, த.சம்பத், ஆர்.ரமேஷ், வி.பி. ஜானகிராமன், கவிதா கௌதமன், சைதை சாதிக், அட்கோ கமலநாதன், சை.மு. சேகர், ந.தமிழரசு, எஸ்.பி. கோதண்டம், எம்.நாகா, ஆர்.கிருஷ்ணகுமார், ஜி. கே.ராமச்சந்திரன், வி.மதிவாணன், டி.என்.சிவமணி, மு. கதிரவன், பொ.பரத்குமார், பி.எஸ்.முருகன், சாந்தி சுந்தரம், அயாத்பாஷா, மு.காளியப்பன், இ.வரதன், மா.ஏழுமலை, பி.எஸ்.பிரகாஷ், சுமதி தீனதயாளன், பூபதி வெங்கடேசன், சி.பி.சாமிநாதன், எல்.சந்திரன், து.முரளி, அ.சுப்பிரமணி, வ.சபரி மற்றும் அணிகளின் நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கலந்து கொள்கின்றனர்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டினை பகுதி அவைத்தலைவர் களக்காடி எல்லப்பன் செய்துள்ளார்.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## மாஸ்டர் தமிழ்ப்பித்தன்

### செப்டம்பர் 15 (2001)



கழகத்தில் சாதாரண தொண்டராக இருந்து படிப்படியாக உயர்ந்து தி.மு.க. மாநில தொண்டர் அணிச் செயலாளராகப் பொறுப்பேற்று சிறப்புற பணியாற்றியவர்.

2001ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா பிறந்த நாளன்று சிறந்த தொண்டர் அணியின் விருதினை தலைவர் கலைஞர் அவர்கள் கையால் பதக்கம் பெற்றவர்.

தன் உயிரினும் மேலான தலைவர் கலைஞர் திருக்கரத்தால் விருதினைப் பெற்று அளவற்ற மகிழ்ச்சியில் நின்ற மாஸ்டர் தமிழ்ப்பித்தன் அதே இடத்தில் தன்னுயிரை இழந்தார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**